## காவல்துறை நிபந்தனைகளை ஏற்க மறுத்தது ஏன்?

# கரூர் சம்பவத்திற்கு முழுப் பொறுப்பு த.வெ.க. மட்டுமே!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ காட்டமான பேட்டி!

**சென்னை, அக். 1 -**

**“கரூர் துயர சம்பவத்திற்கு முழு காரணம் தமிழக வெற்றிக் கழகம் மட்டுமே” என்றும் “கரூர் சம்பவத்தில் முதலமைச்சர் மின்னல் வேகத்தில் செயல்பட்டு இருக்கிறார் ” என்றும்**

**தமிழ்நாட்டில் இதுவரை விஜய் பயன்படுத்தும் வாகனம் போன்று யாரும் பயன்படுத்தியது கிடையாது, காவல்துறை நிபந்தனைகளை ஏன் விஜய் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் வைகோ கேள்வி” எழுப்பியுள்ளார். மேலும் “சி.பி.ஐ. பா.ஜ..க வின் கைக்கருவி, பா.ஜ.க. என்ன சொல்லுகிறதோ அதைத் தான் சி.பி.ஐ. செய்வார்கள், திட்டமிட்டு அ.தி.மு.க. பா.ஜ.க. சி.பி.ஐ. கேட்கிறது என்று மதிமுக பொதுசெயலாளர் வைகோ பேட்டியளித்துள்ளார்.”**

சென்னை எழும்பூரில் உள்ள ம.தி.மு.க. தலைமை அலுவலகமான தாயகத்தில் கரூர் கொடுந்துயரம் காரணம் யார்? என்பது குறித்து மதிமுக பொது செயலாளர் வைகோ செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

தமிழக வரலாற்றிலேயே நடைபெறாத கொடுந்துயர் பேர் அவலம் கரூரில் நடைபெற்றுள்ளதாகவும் பொது வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் தங்களுக்கு வருகிற கூட்டத்தை ஒழுங்குபடுத்த இயக்கத்தை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும் என்ற அவர் கரூர் சம்பவத்தில் பொறுப்பேற்க வேண்டியது தமிழக வெற்றி கழகம்தான்.

**தொண்டர்படை அமைத்த கலைஞர்!**

மேலும் கூறிய அவர் இரவு 7 மணிக்கு தான் கரூர் எல்லைக்கு விஜய் போகிறார், பெரும் விபத்து நடக்கக்கூடாது என்பதை அறிந்து விஜய் எச்சரிக்கையாக செயல்பட்டு இருக்க வேண்டும் என்ற அவர் 70 அடி நீளத்திற்கு ஒரு பெரிய வாகனம் ஒரு சாலையில் திரும்பக் கூட முடியாது அதில் விஜய் வருவதாகவும் சாலையில் இருப்பவர்கள் முண்டியடித்துக் கொண்டு நெருங்கி வரும் பொழுது வாகனத்தின் கதவைத் திறந்து தொண்டர்களை பார்க்கலாம் ஆனால் அதை விஜய் செய்யவில்லை என்றும் விஜய் பிரச்சாரம் மேற்கொள்ளும் பொழுதே 4,5 பேர் இறந்ததாக செய்திகள் வந்தது என கூறிய அவர் 1500 பேருக்கு நேர்காணல் செய்து 300 பேரை தேர்ந்தெடுத்து தி.மு.க.வில் தொண்டர் படை அமைத்தார் கலைஞர் .

ஒரு நிகழ்ச்சி நடந்தால் முழுமையாக நடந்து முடியும் வரை பதற்றம் இருக்க வேண்டும். கூட்டத்தில் தண்ணீர் இல்லாமல் தொண்டர்கள் கேட்கும்பொழுது விஜய் தண்ணீரை வீசுகிறார், இங்கு வந்து மின்சாரம் இல்லை என்று கூறுவதாகவும் திட்டமிட்டு தமிழக வெற்றி கழகத்தினர் தமிழ்நாடு அரசு மீதும் சட்டமன்ற உறுப்பினர் மீதும் முதலமைச்சர் மீது தாக்குதலை நடத்த ஆரம்பித்துள்ளனர் எனவும் தவறான குற்றச்சாட்டை முன் வைக்கிறேன்.

**சி.பி.ஐ.யை இயக்குவது மோடிதான்!**

ஏதாவது விபரீதங்கள் வரக்கூடாது என்றுதான் மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் ஆயத்தமாக இருந்தனர் என கூறிய வைகோ ஒரு தரப்பினர் சொல்கிறார்கள் தமிழக வெற்றிக் கழகத்தினர் ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்தனர் என்று அபாண்டமான குற்றச்சாட்டை தனிநபர் ஆணையம் மீது தமிழக வெற்றி கழகத்தினர் கூறுகின்றனர், தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு பொழுது தனி நபர் ஆணையத்தை அமைத்தவர் எடப்பாடி என்றும் சி.பி.ஐ. பாரபட்சம் இல்லாமல் நடுநிலையோடு அறிக்கையை கொடுத்து விடுவார்களா? என கேள்வி எழுப்பிய அவர் சிபிஐ இயக்குவது மோடி தான் என்றும்



இங்கு இருக்கக்கூடிய அரசு மீது களங்கம் ஏற்படுத்த இவர்கள் ஏன் முயலக் கூடாது என அறிவுறுத்திய அவர் எதிர்க்கட்சிகளை நசுக்க அனைத்து வேலைகளையும் பா.ஜ.க. செய்து வருகிறது.

**மின்னல் வேகத்தில் செயல்பட்ட முதல்வர்!**

8, 10 மாத குழந்தைகளை ஏன் பொதுமக்கள் கூட்டத்திற்கு தூக்கிச் செல்ல வேண்டும், பொதுமக்கள் பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும் என ஆதங்கமாக பேசிய வைக்கோ அதிமுக முன்னாள் அமைச்சர் விஜய பாஸ்கர் கூட உடனடியாக அங்கு சென்றதாகவும் கரூர் சம்பவத்தில் முதலமைச்சர் மின்னல் வேகத்தில் செயல்பட்டு இருக்கிறார் என்றும் திமுகவை தொடர்ந்து குறிவைத்து தாக்குவதாகவும் எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல் தொடர்ந்து பேசி வருகிறார்கள் என பேசிய அவர் அனுபவமிக்கவர் எண்ணற்ற திரைப்படங்களில் நடித்தவர் தங்களைப் பார்க்க வந்த மக்கள் மிதிபட்டு சாகிறார்கள், அவர் பேசும் பொழுதே நான்கைந்து பேர் இறந்ததாக செய்திகள் வருகிறது, தமிழக வெற்றி கழகத்தை சேர்ந்தவர்கள் ஆம்புலன்சை ஏற்பாடு செய்ததாக செய்திகள் வருகிறது என்றும் ஆட்சியாளர்கள் மீது பொறுப்பாளியாக முயற்சிப்பதை கடுமையாக கண்டிக்கிறேன்.

**ஆட்சியாளர்கள் மீது பழிசுமத்துவதா?**

ஆட்சியாளர்கள் மீது குற்றம் சாட்டுவது 1 சதவீதம் கூட நம்ப முடியாதது, கட்டமைப்போடு கட்சியில் ஆட்களை ஏற்பாடு செய்து கூட்டத்தை முறைப்படுத்த பொறுப்பு உண்டு என தெரிவித்த அவர் சொன்ன நேரத்திற்கு செல்ல முடியவில்லை என்றாலும் ஒரு மணி நேரம் அல்லது 2 மணி நேரம் தாமதமாக செல்லுங்கள், ஆட்சியாளர்கள் மீது பழி சுமத்தும் போக்கிற்கு கடும் கண்டனம் தெரிவிக்கிறேன்.

அதிக கவனம் செலுத்தி பாதுகாக்க வேண்டிய பொறுப்பு கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களுக்கு தான் உண்டு விஜய் கரூருக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களை பார்க்க வேண்டும் என்று சொல்லி இருந்தால் காவல்துறை அனுமதி கொடுத்திருக்கும் எனவும் முப்பெரும் விழாவை 30 பேர் விழா என்று விஜய் கேலி செய்வது எதற்கு? ஒரு பெரும் நிகழ்ச்சி நடக்கும் என்னாகுமோ என்ற பெரும் பயம் இருக்க வேண்டும்.

விஜய் பயன்படுத்தும் வாகனம் போன்று தமிழ்நாட்டில் இதுவரை யாரும் அதுபோன்ற வாகனத்தை பயன்படுத்தியது கிடையாது. காவல்துறை நிபந்தனைகளை ஏன் விஜய் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆட்சிக்கு தி.மு.க. வரக்கூடாது என்பதற்காக எதிர்க்கட்சிகள் குற்றச் சாட்டுகளை சொல்லி வருவகிறது.

போலீஸ் பிரமாதமாக செயல்பட்டு என்னை பாதுகாப்பாக அழைத்து வந்தனர் என்று விஜய் கரூர் கூட்டத்தில் கூறியதை குறிப்பிட்டுள்ளார்.

பா.ஜ.க.வின் உண்மையை யார் கண்டறிவது? சந்தடி சாக்கில் தமிழ்நாட்டின் உள்ளே நுழைந்து விடலாம் என்று பா.ஜ.க. நினைப்பதாகவும் எங்காவது சந்து பொந்து கிடைக்குமா என்றும் பார்க்கிறது.

**முதலமைச்சரை விமர்சிப்பது தவறு!**

சம்பவம் நடைபெற்ற உடனடியாகவே முதலமைச்சர் கரூருக்கு சென்றார். முதலமைச்சரை விமர்சிப்பது மிக மிகத் தவறு.

தமிழக வெற்றிக் கழகத்தினால் மட்டுமே கரூர் பெருந்துயரம் நடந்துள்ளது சி.பி.ஐ. பா.ஜ.க.வின் கைக்கருவி, பா.ஜ.க. என்ன சொல்லுகிறதோ அதைத்தான் சி.பி.ஐ. செய்வார்கள், திட்டமிட்டு அ.தி.மு.க. பா.ஜ.க. சி.பி.ஐ. கேட்கிறது, ஒரு நபர் ஆணையத்தைப்பற்றி பேச எடப்பாடி பழனிச்சாமிக்கு என்ன யோக்கியம் தகுதி உள்ளது. விஜயை விசாரிக்கலாம். கைது செய்யக்கூடாது. அ.தி.மு.க. பா.ஜ.க. பின்னணியில் விஜய் கைது என்று பரப்பி வருகிறது. விஜய் கைது தொடர்பாக அரசாங்கத்திடம் அப்படி ஒரு திட்டம் நான் அறிந்த வரையில் இல்லை.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் பேட்டியளித்தார்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




### திருவூர் - மேலகொண்டையார் அரசு பள்ளியில்

## ரூ. 2.61 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் அமைக்கும் பணிகள்!

### ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டினார்

*திருவள்ளூர் அக் 01;*

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம் ஊராட்சி பகுதியில் அரசு மாதிரி உயர் நிலைப் பள்ளியில் 1.19 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் மற்றும் சுற்றுச்சுவர் அதேபோல் மேலகொண்டையார் அரசு பள்ளியில் 1.42 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் மற்றும் சுற்று ச்சுவர் அமைக்கும் பணி துவக்க விழா நடைபெற்றது

இதில் ஒன்றிய கழகச் செயலாளர் சே.பிரேம் ஆனந்த் வரவேற்புரை ஆற்றினார் இதில் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு பள்ளி கட்டிடம் மற்றும் வகுப்பறை அமைப்பதற்கான பணிகளை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கினார்

இதில் வட்டார வளர்ச்சி அலுவலர் செல்வகுமார் தலைமையாசிரியர் ச.மலர் கொடி, ஒன்றிய துணை செயலாளர் மு.ராஜா, ஜி. ரமேஷ், மாவட்ட பிரதிநிதி ஆர்.திலீப்ராஜ், நிர்வாகிகள் ராமானுஜம், கே.மணி கண்டன், கிளை செயலாளர்கள் நிர்வாகிகள் சுபாஸ், தாமரைசெல்வம், வளர்மதி, சுந்தர்(எ)துரைராஜ், ராதாகிருஷ்ணன், ரூபி, வினோத்குமார், சிபி, சதீஷ், ஹமாநாத், ஞானசேகரன் எத்திராஜ் லோக நாயகன், பூபாலன், கே.ஜி.ரமேஷ், மணி வண்ணன், வெங்கடேசன், எஸ்.ராமானுஜம், நாராயணன், ஏழுமலை, கங்காதரன், பாலாஜி, குணசேகர், மோகனசுந்தரம், வாசு, மணிவண்ணன், பத்மநாபன், ரோமாரியோ, மற்றும் கழக நிர்வாகிகள் பள்ளி ஆசிரியர்கள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்

### கரூரில் விஜய் பரப்புரரைக் கூட்டத்திற்கு மைதானம் போன்ற இடத்தை ஏன் கேட்கவில்லை?

# விடுமுறை நாளான குறிப்பிட்ட தினத்தில் பத்தாயிரம் பேர்தான் வருவார்கள் என்று எப்படிக் கணித்தீர்கள்?

## த.வெ.க. தரப்பிடம் கரூர் நீதிபதி சரமாரி கேள்விகளை எழுப்பினார்!

கரூர், செப். 1 -

கரூரில் 41 உயிர்களை பலிகொண்ட பெரும்துயரம் தொடர்பான வழக்கு கரூர் மாவட்ட நடுவர் நீதிமன்ற 2வது நீதிபதி பரத்குமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது, காவல்துறை தரப்பில் ஆஜரான துணை கண்காணிப்பாளர் செல்வராஜ், விஜயின் பிரச்சாரம் நடைபெற்ற இடத்தில் அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் காவல்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தன என தெரிவித்தார். எனினும் காவல்துறை அறிவுறுத்திய பாதையில் விஜய் செல்லாமல் தவறான ரூட்டில் சென்றார் என்றும் கேரவனுக்குள்ளேயே விஜய் இருந்ததால் அந்த இடத்தில் அசாதாரண சூழல் இருந்தது என்றும் தெரிவித்தார். புஸ்ஸி ஆனந்த் வாகனங்களை நிறுத்தி வேண்டுமென்றே தாமதத்தை ஏற்படுத்தினார் என்றும் கூட்டம் கட்டுக்கடங்காமல் இருந்த போது விஜயின் வாகனத்தை மேலும் முன்னோக்கி செல்ல ஆதவ் அர்ஜீனா கூறினார் என்றும் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அங்கு ஏற்பட்ட அசாதாரண சூழலுக்கு புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜீனா உள்ளிட்ட த.வெ.க., நிர்வாகிகளே முக்கிய காரணம் என்றும்

பிரச்சாரம் நடைபெறும் இடத்துக்கு விஜய் குறித்த நேரத்தில் வராமல் வேண்டுமென்றே தாமதமாக வந்தார் என்றும் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து நீதிபதி, தவெக தரப்பினரை நோக்கி எந்தெந்த இடங்களை தேர்வு செய்து பிரச்சார கூட்டத்திற்கு கேட்டீர்கள், மைதானம் போன்ற இடத்தை ஏன் கேட்கவில்லை என்று சரமாரியாக கேள்வி எழுப்பினார். விடுமுறை நாளில் பத்தாயிரம் பேர் தான் வருவார்கள் என்று எப்படி கணித்தீர்கள் என்றும் நீதிபதி அடுக்கடுக்கான கேள்விகளை த.வெ.க. தரப்பிடம் எழுப்பினார். இதைத்தொடர்ந்து காவல் துறை தரப்பில் இதுவரை 41 பேர் உயிரிழந்திருக்கிறார்கள், உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் சூழல் இருப்பதால் இந்த வழக்கில் தவெக நிர்வாகிகளை கைது செய்ய வேண்டியுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

மேலும் நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த விசாரணையில் முழு உண்மை யும் தெரிய வரும் என்றும் காவல் துறை தரப்பில் டிஎஸ்பி செல்வராஜ் தெரிவித்தார்.

## தொடர் விடுமுறை: தனியார் ஆம்னி பேருந்துகள் அதிக கட்டணம் வசூலித்தால் அபராதம்!

*சென்னை, அக்.1-*

ஆயுதபூஜை, விஜயதசமி மற்றும் தொடர் வார விடுமுறையை முன்னிட்டு (01.10.2025 முதல் 05.10.2025 வரை) பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால் அதனைத் தடுக்க தமிழ்நாடு முழுவதும் வட்டாரப்போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து சோதனைச்சாவடி ஆய்வாளர்கள் ஆகியோரைக் கொண்டு சிறப்புக்குழு அமைக்கப்பட்டு அதிகப்படியான கட்டணம் வசூல் செய்யும் மற்றும் அனுமதிக்குப்புறம்பாக இயங்கும் ஆம்னி பேருந்துகளை தீவிரமாக சோதனை செய்து அபராதம் விதித்தும், வாகனங்களை சிறைபிடித்தும் வரி வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# தேசிய தன்னார்வ இரத்த தான நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்தி!

சென்னை, அக்.1-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேசிய தன்னார்வ இரத்த தான நாள் செய்தி வருமாறு:-

இரத்த தானம் என்பது தானங்களில் மிக உன்னதமானதாகும். மனித உயிரை காக்கும் ஒரு மாபெரும் தன்னலமற்ற செயலாக இரத்த தானம் கருதப்படுவதால், நவீன சுகாதார அமைப்புகளில் இரத்தம் வழங்குவது, மனித உயிரின் முக்கி யத்துவத்தையும், மனித குணத்தின் மேன்மையையும் பிரதிபலிக்கிறது. இந்த தன்னார்வச் செயலின் அருமையை வலியுறுத்தும் நோக்கில், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் முதல் நாள், ‘தேசிய தன்னார்வ இரத்த தான தினமாக கொண்டாடப் படுகிறது.

இது, பொதுமக்களிடையே இரத்த தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு முக்கிய நிகழ்வாகும். இந்த ஆண்டிற்கான தேசிய தன்னார்வ இரத்த தான தினத்தின் கருப்பொருள் “இரத்த தானம் செய்வோம், நம்பிக்கை கொடுப்போம்: ஒன்றாக இணைந்து நாம் மனித உயிர்களைக் காப்போம்” (Give Blood, Give Hope: Together We Save lives) என்பதாகும்.

பொதுமக்களிடையே தன்னார்வ இரத்த தானத்தின் முக்கியத்துவத்தை தெரிவிக்கும்பொருட்டு, மாநிலம் முழுவதும், பல்வேறு இரத்த தான முகாம்கள், பல்வேறு ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து சிறப்பாக நடத்தி வருகிறது.

தமிழ்நாட்டில், கடந்த 2024-2025-ஆம் ஆண்டு அரசு மற்றும் தனியார் இரத்த வங்கிகள் மூலமாக, 9.50 இலட்சம் இரத்த அலகுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அரசு இரத்த வங்கிகள் மூலமாக 4,354 இரத்த தான முகாம்கள் நடத்தப்பட்டு, 4.53 இலட்சம் இரத்த அலகுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதில், 99 விழுக்காடு இரத்த அலகுகள் தன்னார்வ இரத்த கொடையாளர்கள் மூலமாக பெறப்பட்டது என்பது சிறப்புக்குரியது, பாராட்டுக்குரியது.

இவ்வாறு சேகரிக்கப்படும் இரத்தம், அரசு மருத்துவமனைகளில், சிகிச்சை பெறும் மருத்துவ பயனாளர்களுக்கு எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல், மனித உயிர் காக்கும் உன்னத நோக்கத்துடன் வழங்கப்பட்டு வருகிறது.

நம் ஒவ்வொருவரின் உடலிலும், சுமார் 5 லிட்டர் இரத்தம் உள்ளது. இரத்த தானம் செய்யும்போது, சுமார் 350 முதல் 450 மி.லி. மட்டுமே இரத்தம் எடுக்கப்படுகிறது, இதற்கு 20 நிமிடங்கள் தான் தேவைப்படுகிறது. 18 முதல் 65 வயது வரை உள்ள ஆரோக்கியமான ஆண் மூன்று மாதத்திற்கு ஒரு முறையும், பெண் நான்கு மாதத்திற்கு ஒரு முறையும் இரத்த தானம் செய்யலாம்.


இரத்த தானம் செய்தவுடன், எந்தவொரு பாதிப்பும் இல்லாமல் அன்றாட செயல்களில் ஈடுபடலாம். இரத்த தானம் செய்வதால், உடலில் புதிய இரத்த அணுக்கள் உருவாகி தானம் செய்வோரின் நலனும் காக்கப்படும்.

மனித உயிரின் மதிப்பை உணர்ந்து, மருத்துவ பயனாளிகளுக்காக தயக்கமின்றி, இரத்த தானம் செய்ய முன்வரும் தன்னார்வ இரத்த கொடையாளர்களின் தன்னலமற்ற மனித உயிர் காக்கும் உன்னத பணியையும், சமூகத்திற்கு அவர்கள் செய்யும் பங்களிப்பையும் மனமார வாழ்த்திப் பாராட்டுகிறேன். இரத்த தானம் செய்வதில் ஒவ்வொருவருக்கும் உள்ள பொறுப்பை உணர்ந்து, மனித உயிர்களைப் பாதுகாக்கும் பணியில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு, தனது செய்திக் குறிப்பில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டக் கழகப் பொருளாளர்

## மறைந்த பி.என்.சுப்பிரமணியன் நினைவு நாள்!



*வேலூர், அக். 1 -*

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டக் கழகப் பொருளாளர், மறைந்த பி.என்.சுப்பிரமணியன் அவர் களின் 10 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று (1.10.2025) நடை பெறுகிறது.

மறைந்த பி.என்.சுப்பிரமணியன் 25 ஆண்டுகளுக் கும் மேலாக ஆர்க்காடு நகரக் கழகச் செயலாள ராகப் பணியாற்றியவர்.

தி.மு.கழக தணிக்கை குழு உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பின ராகவும் இருந்துள்ளார்.

நகரக் கழக அவைத் தலைவர் பி.என்.எஸ். இராஜசேகரன், மாவட்ட மருத்துவ ரணி அமைப்பா ளர் டாக்டர் பி. என்.எஸ்.சரவணன் ஆகியோர் அவரது புதல்வர்கள்.

# நடிகர் திலகம் சிவாஜி கணேசன் 98 வது பிறந்த நாள்!

## திருவுருவச் சிலைக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவிக்கிறார்!

*சென்னை, அக். 1 -*

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 98ஆவது பிறந்த நாளன்று, அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார் .

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 98 வது பிறந்த நாளான, இன்று ( 1.10.2025 ) காலை 10.00 மணியளவில், சென்னை அடையாறு, தேஷ்முக் சாலையில் அமைந்துள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.



நடிகர் திலகம் செவாலியர் சிவாஜி கணேசன் அவர்கள் 1.10.1928 அன்று பிறந்தார். “நடிப்பு தனது மூச்சு என்றும், நடிப்பு ஒன்றுதான் தனக்குத் தெரிந்த தொழில் என்றும், நடிப்புதான் எனக்குத் தெய்வம்” என்றும் சிவாஜி கணேசன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். குழந்தைப் பருவம் முதற்கொண்டே நடிப்பதில் ஆர்வம் கொண்டு பல்வேறு நாடகங்களில் பங்கேற்று நடித்து வந்தார். பேரறிஞர் அண்ணா அவர்களால் எழுதப்பட்ட “சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்ஜியம்” என்கிற நாடகத்தில் சிவாஜியாக நடித்தார். அவரின் நடிப்புத் திறமையினைப் பாராட்டி தந்தை பெரியார் அவர்கள் “சிவாஜி கணேசன்” என்று பெயர் சூட்டினார்.

சிவாஜி கணேசன் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கதை வசனத்தில் உருவாகிய பராசக்திதிரைப்படத்தின் மூலம் அறிமுகமாகி தமிழ்த் திரைப்பட உலகில் 300 மேற்பட்ட திரைப்படங்கள், 2 இந்தி படங்கள், 9 தெலுங்கு திரைப்படங்கள் மற்றும் ஒரு மலையாளத் திரைப் படம் ஆகியவற்றிலும் நடித்துப் புகழ்பெற்றார். பிரபலமானார்.

சிவாஜி கணேசன் அவர்கள் “நடிகர் திலகம்”, “நடிப்புச் சக்கரவர்த்தி” என்று மக்களாலும், திரை உலகத்தினராலும் அழைக் கப்பட்டார்.

இவர் நடித்த கப்பலோட்டியத் தமிழன், இராஜராஜ சோழன், வீர பாண்டிய கட்டபொம்மன் முதலிய பல வரலாற்றுச் சிறப்புமிக்க திரைப் படங்கள் காண்போரின் மனதில் இன்றும் நிலைத்து நிற்கின்றன.

உலகம் முழுவதும் பாராட்டுகள் பெற்ற அற்புதக் கலைஞர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் நடிப்புத் திறமையைப் பாராட்டி பத்மஸ்ரீ விருது, பத்ம பூஷண் விருது, செவாலியே விருது மற்றும் தாதா சாகிப் பால்கே விருது உள்ளிட்ட பல விருதுகள் வழங்கப்பட்டு சிறப்பிக் கப்பட் டுள்ளார் .

தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் பிறந்த நாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 98 வது பிறந்த நாளான இன்று (1.10.2025), அவரது திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.